# திருப்பத்தூர் நகராட்சி

# 2012–2013–ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1) அமைப்பும் நிர்வாகமும்

திருப்பத்தூர் நகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசு ஆணை (நிலை) எண் 125 நாள் 08.09.2011–ன்படி திருப்பத்தூர் நகராட்சியின் எல்லைகள் விரிவு படுத்தப்பட்டு 36 வார்டுகள் என எல்லைகள் நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டு அதன்படி தற்பொழுது இயங்கி வருகிறது. திருப்பத்தூர் நகராட்சி நகர் மன்றம் 1886–ம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது.

### அமைப்பு

திருப்பத்தூர் நகராட்சியின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு, தற்போது திருப்பத்தூர் கிராம ஊராட்சியும் இணைந்த பின் நகராட்சியின் மொத்த பரப்பளவு 9.79 சதுர கிலோ மீட்டர் ஆகும். அதன் விவரம் கீழ்வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| திருப்பத்தூர் நகராட்சியின் பரப்பளவு | .. | 4.66 ச.கி.மீட்டர். |
| இணைக்கப்பட்ட திருப்பத்தூர் கிராம ஊராட்சியின் பரப்பளவு | .. | 5.13 ச.சி.மீட்டர். |
| மொத்தம் | .. | 9.79 ச.கி. மீட்டர். |

## 2) மக்கள் தொகை

1981–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 52.441 மக்கள் தொகை கொண்டதாகும், 1991–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 55,282 ஆக இருந்தது 2001–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி (ஆண் 30673 - 30203) = 60876 ஆக உயர்ந்துள்ளது. மேலும் தற்போது நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011–ன்படி (ஆண் 31910+பெண் 32062+திருநங்கையர்–2) = 63974 ஆக உள்ளது. புதிதாக இணைக்கப்பட்ட திருப்பத்தூர் கிராம பஞ்சாயத்தின் மக்கள் தொகையையும் சேர்த்து மொத்த மக்கள் தொகை 78237 ஆகும்.

## 3) இந்நகராட்சியின் தகுதி

இந்நகராட்சி மூன்றாம் நிலையில் இருந்து அரசாணை எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை (எம்.எஸ்) 194 நாள் 10.02.1970–ன்படி 2–ம் நிலைக்கு உயர்த்தப்பட்டது. பின்னர் (நகர மன்ற தீர்மானம் எண் 626, நாள் 24.02.1970) 16.04.77–ம் தேதி ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை 654–ன்படி இரண்டாம் நிலையிலிருந்து 01.04.1977–ம் தேதியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண் 238 நாள் 02.12.2008–ன்படி இந்நகராட்சி முதல் நிலையிலிருந்து 02.12.2008 முதல் தேர்வுநிலை நகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டது. 1981–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 28 வார்டுகளாக பிரிக்கப்பட்டு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை 25.05.1983–ம் தேதிய 754 எண் உத்திரவில் அங்கீகரிக்கப்பட்டது. 1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி 33 வார்டுகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டு 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது மேற்படி 33 வார்டுகளுக்கும் அக்டோபர் 2006–ல் நகரமன்ற தேர்தல் நடைபெற்றது. பின்னர் திருப்பத்தூர் நகராட்சியுடன் திருப்பத்தூர் கிராம ஊராட்சியும் இணைக்கப்பட்டு மக்கள் தொகைக்கு இணங்க 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டு அக்டோபர் 2011 நகர மன்றத்திற்கான தேர்தலும் நடைப்பெற்றது.

| | | |
|---|---|---|
| மொத்த வார்டுகள் | .. | 36 |
| ஆதிதிராவிடருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | .. * | 04 (3, 24, 28, 29 ) |
| பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆதிராவிடர் வார்டுகள் | .. | 02 (30பெ, 36பெ) |
| பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | .. | 10 (1, 5, 10, 17, 26, 27, 31, 32, 33, 35) |
| பொது வார்டுகள் | .. | 20 (2, 4, 6,7, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 18, 19, 20, 21, 22, 23,25,34) |

## 4) நிர்வாக அலுவலர்கள் அறிக்கை ஆண்டில்

**4.1**

| | |
|---|---|
| 1. திரு.கே. பாலகிருஷ்ணன்,எம்.ஏ.எம்.பில்,எம்.பி.ஏ. ஆணையர் | 01.04.2012 முதல் 27.01.2013 வரை |
| 2.திரு. அ. சர்தார், எம்.ஏ., ஆணையர். | 28.01.2013 முதல் 31.03.2013 வரை |

## 4.2 பொறியாளர் :

அறிக்கை ஆண்டில் கீழ் கண்ட பொறியாளர் பணியாற்றி வந்துள்ளார்.

| | | |
|---|---|---|
| திரு. ஆர். இராமசாமி, பி.இ., பொறியாளர் | .. | 01. 04. 2012 முதல் 11.05.2012 வரை |
| திரு. என். ராமகிருஷ்ணன், பி.இ., பொறியாளர் | .. | 12.05.2012 முதல் 31.03.2013 வரை |

## 4.3 துப்புரவு அலுவலர்:

| | | |
|---|---|---|
| 1. திரு. மு. தமிழ்செல்வன் துப்புரவு அலுவலர் | .. | 01.04.2012 முதல் 31.03.2013 வரை |

## 4.4 நகரமைப்பு அலுவலர்

| | | |
|---|---|---|
| 1. திரு. பி. கோபாபுரம், நகரமைப்பு அலுவலர் | .. | 01.04.2012 முதல் 31.03.2013 வரை |

## 4.5 மேலாளர்

| | | |
|---|---|---|
| 1. திரு. நா. அன்புமணி மேலாளர் | .. | 01.04.2012 முதல் 30.06.2012 வரை |
| 2. திரு. ஜி. தங்கராஜ் உதவியாளர் மற்றும் மேலாளர்(பொ) | .. | 02.07.2012 முதல் 22.07.2012 வரை |
| 3. திரு. கே. குமார், மேலாளர் | .. | 23.07.2012 முதல் 31.03.2013 வரை |

## 5) நகர் மன்ற தலைவர்

| | | |
|---|---|---|
| திரு. க. அரசு, M.A., B.Ed அவர்கள் நகர்மன்ற தலைவர் | .. | 01.04.2012 முதல் 31.03.2013 வரை |

**திருமதி. செல்வி.பி**

**நகர மன்ற துணைத்தலைவர்**

**நகரமன்ற உறுப்பினர்கள் பெயர்**

1. திருமதி. கேத்தரீன் ஜார்ஜினா.பி
2. திரு. சீனிவாசன். ஜி
3. திரு. சரவணன்.வி.
4. திரு. பிரகாஷ்.எஸ்
5. திருமதி. கண்ணகி .எஸ்.
6. திரு. முகமது தாஜ்
7. திரு. பூபதி .டி.ஜி.
8. திரு. தேனப்பன் .வி.
9. திரு. சபியுல்லா .ஏ.ஆர்.
10. திருமதி. பர்ஹீன் .என்.ஆர்
11. திரு. ஆசிப்கான் .டி.ஆர்
12. திரு. சவுத் அகமத் .எம்.எஸ்
13. திரு. நெடுமாறன்.எம்.எஸ்
14. திரு. வெங்கடேசன்.டி.எஸ்
15. திரு. சலீம்.எம்.
16. திரு. பாரத். இ
17. திருமதி. சிவசங்கரி.எம்
18. திரு. சரவணன்.எஸ்.
19. திரு. செல்வகுமார்.டி.கே.
20. திரு. ஐயப்பன்.டி.கே
21. திரு. சரவணன்.கே.
22. திரு. மகாலிங்கம்.வி
23. திரு. கமால்பாஷா.எம்.கே

24. திரு. ஜானகிராமன்.எஸ்

25. திரு. இரவி. தி.க.

26. திருமதி. கேதாரகௌரி.எஸ்

27. திருமதி. லட்சுமி.கே

28. திரு. அசோக்குமார்.ஜி

29. டாக்டர் செல்வி வினோதினி. வீ

30. திருமதி. கண்ணகி.எஸ்.

31. திருமதி. பூங்கோதை.எஸ்

32. திருமதி. மணிபெருமாள்.பி

33. திரு. பூபதி.எஸ்.

34. திருமதி. புஷ்பா.எஸ்

35. திருமதி. சின்னம்மாள்.எ

## 6) மன்ற நடவடிக்கைகள்:—

அறிக்கையாண்டில் நகரமன்றத் தலைவர் அவர்களால் 13 முறை கூட்டங்கள் கூட்டப்பட்டது. அவைகளில் 06 சாதாரண கூட்டங்களும் 07 அவசரக் கூட்டமும், மற்றும் சிறப்பு கூட்டம் ஏதும் கூட்டப்படவில்லை அவைகளில் மொத்தம் 341 பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பொருட்கள் மீதும் முடிவெடுக்கப்பட்டது.

## 7) குழுக்கள்

நடப்பு ஆண்டில் கீழ் குறிப்பிட்ட குழுக்கள் 01.04.2012 முதல் 31.03.2013 வரை செயல்பட்ட குழுக் கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

| வ.எண் | குழுவின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | நியமனக்குழு | – | – |
| 2 | ஒப்பந்தக்குழு | – | – |
| 3 | உள்ளூர் திட்டக்குழுமம் | – | – |

## 8) நிர்வாகம்

நிர்வாக செலவு நடப்பு ஆண்டில் மொத்த பணியாளர்களின் சம்பளம் ரூ.4,88,66,808.00 படிவங்கள் அச்சடிக்கவும் நமூனாக்கள் வாங்கவும் பதிவேடுகள் மற்றும் அஞ்சல் வில்லைகள் வாங்கவும் செலவான தொகை ரூ. 7,88,989.00 ஆகும்.

## 2012–2013–ம் ஆண்டில் தொடர்ந்த வழக்குகள் விவரம்

2012–2013–ம் ஆண்டில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகள், மற்றும் நடப்பு ஆண்டில் தொடரப்பட்ட வழக்குகள், ஆகியவைகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### பணியாளர்கள்

பொறியியல் பிரிவில், கீழ் குறிப்பிட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| பொறியாளர் | .. | 1 |
| பணி மேற்பார்வையாளர் | .. | 1 |
| பணி ஆய்வர் | .. | 1 |
| மின் பணியாளர் நிலை–2 | .. | 1 |
| மின் கம்பியாளர் | .. | 2 |
| மின் கம்பி உதவியாளர்கள் | .. | 2 |
| ஓட்டுநர் | .. | 1 |
| பூங்கா காவலர் | .. | 1 |
| சாலை பராமரிப்பு மஸ்தூர் | .. | – |
| பேருந்து நிலைய காவலர் | .. | 1 |
| **குடிநீர் பிரிவில்** | | |
| இளநிலைப்பொறியாளர் | .. | 1 |
| மின் கண்காணிப்பாளர் நிலை –1 | .. | 1 |
| குழாய் பொருத்துனர் | .. | 1 |
| மீட்டர் ரீடர் | .. | 1 |
| மின் பணியாளர் நிலை–2 | .. | – |
| ஓட்டுநர்கள் | .. | 2 |
| காவலர்கள் | .. | 3 |
| குழாய் திருப்புனர் | .. | 1 |

பொதுப்பணி பணியாளர்களின் ஆண்டு மொத்த செலவு .. ரூ. 45223213.00 இலட்சம்
குடிநீர் பிரிவு பணியாளர்களின் ஆண்டு மொத்த செலவு .. ரூ. 3643595.00 இலட்சம்

## 9) பாதைகள் பாலங்கள் ஓடைத்துறை முதலியன :-

### 9.1 பாதைகள்

இந்நகர எல்லைக்குள் மூன்று சாலைகள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகர மன்றத்தால் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் 57.081 கிலோ மீட்டர் 24.10.2011 வரை ஆகும். திருப்பத்தூர் ஊராட்சி நகராட்சியுடன் இணைக்கப்பட்டதில் தற்போது மொத்தம் நீளம் 91.86 கிலோ மீட்டர் ஆகும்.

இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் விவரம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| தார் சாலை | .. | 46.76 |
| சிமெண்ட் சாலை | .. | 30.30 |
| கருங்கல் பலகை சாலை | .. | 9.91 |
| இதர சாலை | .. | 4.917 |
| மொத்தம் | .. | 91.86 |

### 9.2 பாலங்கள் ஓடைத்துறை முதலியன :-

இந்நகரில் பெரிய பாலங்கள் ஓடைத்துறைகள் ஒன்றுமில்லை

1. நகராட்சி பராமரிப்பில் உள்ள ஆழ்துளை கிணறுகள் (கைபம்பு) .. 228
2. பவர் பம்பு .. 178

### கருவிகளும் தளவாடங்களும் :-

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்காணும் வாகனங்கள் மூலம் நகரத்திலுள்ள எல்லா பகுதிகளிலிருந்தும் குப்பைகளை உர கிடங்கிற்கு எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | T.N. 23 W 0452 TN 23W 1978 | .. | டிராக்டர் |
| 2 | T.N. 23 W 3873 | .. | அசோக் லைலண்டு லாரி |
| 3 | T.N. 23 W 4597 | .. | கழிவுநீர் ஊர்தி |
| 4 | T.N. 23 Y 2067 | .. | மின் லாரி |
| 5 | T.N. 23 W 9515 | .. | மின் லாரி |
| 6 | T.N. 23 K 2292 | .. | பவர் டில்லர் |
| 7 | T.N. 23 K 2293 | .. | பவர் டில்லர் |
| 8 | T.N. 23 K 2295 | .. | பவர் டில்லர் |
| 9 | T.N. 23 K 2296 | .. | பவர் டில்லர் |
| 10 | TN 23 AW 3920 | .. | மினி லாரி |
| 11 | TN 23 AW 3921 | .. | மின் லாரி |
| 12 | TN 23 BW 2370 | .. | ஜீப் |
| 13 | TN 23 W 4597 | .. | டம்பர் பிளேசர் லாரி |

மேலும் கலைமை உர விற்பனை மூலம் நடப்பு ஆண்டில் வருவாய் ஏதுமில்லை. இவைகள் தவிர பொறியியல் பிரிவில் கீழ்காணும் இரு வாகனங்கள் (பவர் டில்லர்) மூலமும் சுத்துவைக் கூடங்களுக்கும் குடிநீர் கிடைக்காத இடங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | TDJ. 8532 | .. | பவர் டில்லர் |
| 2 | TDJ.8533 | .. | பவர் டில்லர் |
| 3 | TDJ.3050 | .. | மகேந்திரா மற்றும் மகேந்திரா ஈப்பு கழிவுச் செய்ய நடவடிக்கையில் உள்ளது |
| 4 | T.N. 23 Z 0139 | .. | மகேந்திரா மார்சல் ஈப்பு |
| 5 | T.N. 23 P 8444 | .. | மகேந்திரா பொலிரோ |

## 2012–2013–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் :-

*****

2012–2013–ம் ஆண்டு திருவண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் எம்.பி. அவர்களின் தொகுதி மேம்பாட்டுதிட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் 47/881/12 நாள் 27.11.2012–ம் தேதிய செயல்முறைபடி ரூ.15.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து 7 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | செலவினம் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண் 9–ல் வி.சி.ஓ. தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.00 | 2.00 | பணி முடிக்கப்பட்டது |
| 2 | வ.எண் 32 ஆரிப் நகரில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.00 | 2.00 | பணி முடிக்கப்பட்டது |
| 3 | வ.எண்.24 அப்பாய் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 3.00 | 3.00 | பணி முடிக்கப்பட்டது |
| 4 | திருப்பத்தூர் சுடுகாட்டில் எரிசக்தி சோலார் விளக்கு 5 எண்ணிக்கை அமைத்தல். | 1.50 | 1.50 | பணி முடிக்கப்பட்டது |
| 5 | திருவண்ணாமலை சாலையில் உள்ள அம்பேத்கார் சிலை பார்க் அபிவிருத்தி பணிகள் | 4.00 | - | பணி முடிவுறும் நிலையில் உள்ளது |
| 6 | வார்டு எண் 36 புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1.50 | 1.50 | பணி முடிக்கப்பட்டது |
| 7 | வார்டு எண் 9 புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் | 1.50 | 1.50 | பணி முடிக்கப்பட்டது |

**1) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (திரு. ரமேஷ்)**

மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண் நாள் 8.8.2012–ம் தேதிய செயல்முறைகளின்படி 4 பணிகளுக்கு ரூ.27.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது இத்திட்டதில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | செலவினம் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | புதுப்பேட்டை ரோடு பேருந்து நிறுத்துமிடத்தில் பயணியர் நிழற்கூடம் கட்டுதல், | 7.00 | – | பணி நடைபெற்று வருகிறது (12.09.2013) |
| 2 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் பேருந்து நிறுத்தும் இடத்தில் பயணியர் நிழற்கூடம் கட்டுதல் | 7.00 | – | பணி நடைபெற்று வருகிறது (09.10.2013) |
| 3 | வ.எண்.03 சிவராஜ்பேட்டையில் சமுதாய கூடம் கட்டுதல் | 10.00 | 10.00 | பணி முடிக்கப் பட்டது |
| 4 | வார்டு எண் 32 ஆரிப் நகரில் கழிவுநீர் கால்வாய் கட்டுதல் | 3.50 | 3.50 | பணி முடிக்கப் பட்டது |

**இடைவெளி நிரப்பு நிதி திட்டம் 2012–2013**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண் 21951/பி1/12,2 நாள். 03.12.2012 ரூ.75.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் ரூ.50.00 இலட்சம் மான்யம் மற்றும் ரூ.25.00 இலட்சம் நகராட்சி பங்கு தொகை சேர்த்து கிருஷ்ணகிரி சாலையில் உள்ள சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் இத்திட்டத்தில் ரூ.10.00 குடிநீர் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதில் வார்டு எண் 1, 2, 24, 32, 34 மற்றும் 35 ஆகிய பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி சின்டெக் டேங்க் அமைக்கும் பணி ரூ.10.50 இலட்சத்தில் முடிக்கப்பட்டுள்ளது.

**2012–2013–ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM)**

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2012–2013–ம் ஆண்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண். 37191/2012/இ1 நாள் 14.09.2012 ரூ.170.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் நகரமன்ற தீர்மானம் எண் 174 நாள் 28.09.2012 ன்படி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | செலவினம் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **சாலைப்பணிகள்** | | | |
| 1 | வார்டு எண் 3, 32 ஆகிய பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல் சிப்பம் (1) | 27.00 | 27.00 | பணி முடிக்கப் பட்டது |
| 2 | வார்டு எண் 27, 28, 35, 34 ஆகிய பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் தார் தளம் அமைத்தல் சிப்பம் (5) | 53.00 | 53.00 | பணி முடிக்கப் பட்டது |
| | **II. திடக்கழிவு பணிகள்** | | | |
| 3 | 140 எண்ணிக்கை தள்ளு வண்டி வாங்குதல் | 25.00 | – | பணி முடிக்கப் பட்டது |
| 4 | உரக்கிடங்கில் சிமெண்ட் தளம் மற்றும் சாலை அமைத்தல் | 25.00 | 10.00 | பணி நடைப் பெற்றுவருகிறது. |
| 5 | உரக்கிடங்கில் மக்கும் குப்பைகள் பிரித்து எடுக்கும் பணி | 10.00 | 10.00 | பணி முடிக்கப் பட்டது |
| 6 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு புதியதாக வாரி சேஸ் மற்றும் பாடி கட்டுதல், மற்றும் டிப்பர் வசதி செய்தல் | 30.00 | – | பணிநடைபெற்று வருகிறது (6.8.2013) |

## குடிநீர் திட்டம் 2008–2009

அரசாணை நிலை எண் 463 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 17.11.2006–ன்படி யுஐடிஎஸ்எம்டி திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்காக ரூ.648.00 இலட்சம் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணை ஆற்று படுகையிலிருந்து குடிநீரினை எடுக்கவும் இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வாரியம் மூலமாக ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு தற்பொழுது பணி முடிக்கப்பட்டு 01.03.2009 முதல் குடிநீர் பெறப்பட்டு வருகிறது.

## மின் விளக்குகள்

நடப்பு ஆண்டில் கீழ்கண்டுள்ள விவரப்படி மின் விளக்குகள் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | 4' அடி குழல் தெரு விளக்குகள் | .. | 1650 |
| 2 | சோடியம் ஆவி விளக்குகள் | .. | 634 |
| 3 | மெட்டல் ஹாலைடு | .. | 94 |
| 4 | உயர் கோபுர மின் விளக்கு | .. | 14 |
| 5 | C.F.L. | .. | 445 |
| 6 | மொத்தம் | .. | 2837 |

நடப்பு ஆண்டில் தெரு விளக்குகள் மின் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவு ரூ. 45 இலட்சமும் செலுத்தப்பட்டது.

## 10) ஆரம்பக் கல்வி :-

இந்நகராட்சியின் எல்லைக்குள் அறிக்கை ஆண்டில் எல்லா கல்வி நிறுவனங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரப்படி பள்ளி செல்ல வேண்டிய வயது வந்த குழந்தைகளின் உத்தேச எண்ணிக்கை 23872 அதில் மாணவர்கள் 9560 ஆகவும் மாணவிகள் 14312 ஆகவும் இருந்தது. இந்த நககாட்சி எல்லைக்குள் பள்ளி செல்ல வேண்டிய குழந்தைகளின் எல்லா ஆரம்ப பாடசாலைகளிலும் கல்வி பயிலும் குழந்தைகளின் உத்தேச எண்ணிக்கை 3892 ஆகும். இதில் மாணவர்கள் 1907 மாணவிகள் 1985 ஆகும்.

அறிக்கை ஆண்டில் இறுதியில் இருந்த பள்ளிகளின் எண்ணிக்கையும் அவற்றில் கல்வி பயின்று வந்தவர்களின் எண்ணிக்கையும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இருந்தன.

| | நகராட்சி பள்ளியின் எண்ணிக்கை | கல்வி பயின்றவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| நகராட்சியின் பாடசாலைகளில் கல்வி பயின்று வந்த குழந்தைகளின் எண்ணிக்கை விவரம் | 11 | 770 |

## முதியோர் கல்வி திட்டம் :

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் முதியோர் கல்வி நிலையம் ஏதும் நிர்வகிக்கப்படவில்லை.

## 11) எண்ணிக்கையும் திறமையும்:-

முந்தைய ஆண்டுகளில் நகராட்சியில் நிர்வகிக்கப்பட்டு வந்த ஆரம்ப பாடசாலைகளின் எண்ணிக்கை 11 ஆகும். அதில் முகம்மதியர் வாழும் பகுதியில் உள்ளதும் உருது மொழியில் பாடம் போதிக்கும் பள்ளிகள் நான்கு ஆகும்.

நகராட்சி துவக்கப்பள்ளிகளில் படிக்கும் மாவண / மாணவியரின் மொத்த எண்ணிக்கை 31.03.2013–ல் உள்ளபடி 579 ஆகும். அதில் மாணவர்கள் 274 மாணவிகள் 305 ஆகும். மாணவர்களின் சராசரி வருகை 80 சதவீதம் ஆகும். அனைத்து நகராட்சி பள்ளிகளிலும் போதனை இலவசமாக போதிக்கப்பட்டது. எல்லா பள்ளிகளிலும் வகுப்பு வாரியாக ஆண் பெண் மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 67 | 66 | 133 |
| 2 | 20 | 46 | 66 |
| 3 | 56 | 54 | 110 |
| 4 | 65 | 75 | 140 |
| 5 | 66 | 64 | 130 |
| மொத்தம் | 274 | 305 | 579 |

நகர அனைத்து துவக்கப் பள்ளிகளிலும் பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் 1–வது வகுப்பு முதல் 5–ம் வகுப்பு வரையில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதி வகுப்பைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் அரசு செலவில் இலவச புத்தகங்கள் வழங்கப்பட்டது. நகராட்சி ஆரம்பப் பள்ளிகளில் 10 பள்ளிகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களிலும், ஒரு பள்ளி வாடகை கட்டிடத்திலும் நடைபெற்று வருகிறது. இக்கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ. 1000.00 ஆகும்.

## உயர் நிலைக்கல்வி

### 12) இடமும் எண்ணிக்கையும் :-

இந்நகரில் நகராட்சியால் உயர்நிலைப்பள்ளி ஏதும் பராமரிக்கப்படவில்லை. ஆனால் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், அரசால் பராமரிக்கப்படுகிறது. இது தவிர தனியார் நிறுவனங்களால் பெண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டும், ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டும் நடத்தப்பட்டு வருகிறது.

### 13) சிறப்பு பணியும் பொது நூலகங்களும் :-

இந்நகர எல்லைக்குள் கத்தோலிக்கரின் சலேஷியன் மிஷன் தூய நெஞ்சக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். மேரிஇமாகுலேட் கான்வென்ட் பெண்களுக்காக ஒரு ஆசிரியை பயிற்சிப் பள்ளியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். உள்ளாட்சி நூலக ஆணையக்குழு பொது நூலகம் ஆகியவற்றினை தொடர்ந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர். மேலும் ஒய்.எம்.சி.ஏ. நிறுவனத்தினரால் முதலுதவி பயிற்சி பாடங்களும் கற்பிக்கப்பட்டு சான்று வழங்கப்பட்டு வருகின்றது. இந்நகராட்சி நடத்திய 11 ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் கல்வித்துறையின் 09.03.1990 முதல் தேதிய அரசாணை எண் 347 எண்ணுள்ள ஆணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் 12.04.1990–ந் தேதிய ந.க.எண் 6616/89/ஜி1, சுற்றறிக்கையின்படி 01.04.1990 முதல் அரசினரின் கல்வித்துறைக்கு நகராட்சியிலிருந்து மாற்றப்பட்டது. பள்ளிக் கட்டிடங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது தற்போது நகராட்சி வசம் உள்ளது.

### 14) இட வசதியும் உபகரணங்களும் :-

நகரமன்ற ஆரம்பப் பள்ளிகள் 11–ல் 10 பள்ளிகள் நகராட்சி கட்டிடங்களிலும், ஒரு பள்ளி வாடகை கட்டிடத்திலும் நடைபெற்று வந்தன. ஆசிரியர்களை அரசாங்க ஆசிரியர்களாக மாற்றப்பட்டாலும் வாடகை கட்டிடம் ஒன்றைத் தவிர மற்ற 10 கட்டிடங்களையும் நகராட்சியே தொடர்ந்து பராமரித்து வருகிறது. வாடகை கட்டிடத்திற்கு தொடர்ந்து மாத வாடகை ரூ.1000/– கொடுக்கப்பட்டு வருகிறது.

### 15) ஆரம்ப கல்வி நிதி:-

நகராமன்ற எல்லைக்குள் கட்டிடங்களின் வருட வாடகை மதிப்பின்பேரில் அரையாண்டிற்கு சொத்துவரியுடன் கல்வி வரியாக 2.5% சதவிகிதமும் காலியிடங்களில் சொத்து மதிப்பில் கல்வி வரியாக 2.5% சதவிகிதமும் விதிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் இதில் வரியாக கிடைத்த மொத்தம் ரூ. 26,57,126.00 ஆகும்.

## பொது நலம்

### 16) மருத்துவ உதவி:-

இந்நகராட்சியில் செயல்பட்டு வந்த தாய் சேய் நல விடுதி 01.04.2012 முதல் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகரில் அரசினரால் பொது மருத்துவமனை ஒன்றும், போதிய தகுதியுள்ள தனிப்பட்ட மருத்துவர்களால் அநேக தனியார் மருத்துவமனைகளும் நடத்தப்பட்டு வருகிறது. மருத்துவ உதவி இந்நகரில் போதுமானதாக உள்ளது. காலரா போன்ற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அரசினர் மருத்துவ மனையில் தனியாக தடுப்பு பிரிவு காலரா கொட்டகை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### வியாதிஸ்தர்கள் கணக்கு:-

இந்நகராட்சியில் 01.04.2012 முதல் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவரும், ஒரு மருந்தாளுநர், மற்றும் மருத்துவமனை பணியாளர் பணிபுரிந்து வருகின்றனர்.

### வசதியும் தளவாடங்களும்:-

இவ்வாண்டில் குப்பையை அகற்ற இரு டம்பர் பிளேசர் லாரியும், 4 மினி லாரியும், ஒரு லாரியும், 4 மினி ஆட்டோக்களும் மேலும் ஒரு கழிவுநீர் உறிஞ்சும் டிராக்டர் எஞ்சினுடன் கூடிய டேங்கர் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரம்

### 17) அமைப்பு முறையும் பணியாளர்களும்:-

ஒரு துப்புரவு அலுவலர், மூன்று துப்புரவு ஆய்வர்களும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 7 பேரும், மகப்பேறு உதவியாளர்கள் 4 பேரும், ஆயா மூன்று பேரும், 5 ஓட்டுநர்களும், துப்புரவு அலுவலரின் அலுவலக உதவியாளர் ஒருவரும், துப்புரவு தொழிலாளர்கள் 130 பேரும். கொசு ஒழிப்பு திட்டத்திற்காக சாக்கடை சுத்தம் செய்து மருந்து தெளிப்பவர்கள் 4 பேரும் சுகாதாரப் பிரிவில் அடங்கியுள்ளனர். ஆக துப்புரவு தொழிலாளர்கள் எண்ணிக்கை 139 ஆகும்.

## 18 விளம்பரம்:-

காலரா தடுப்பு மற்றும் பெரியம்மை காசநோய் போன்ற தொற்று நோய்கள் தடுப்பு சம்மந்தமாக பிரச்சார அறிக்கைகள் நகரின் எல்லாப் பகுதிகளும் விநியோகிக்கப்பட்டது. திரைப்பட அரங்குகளில் சிலைடுகள் மூலமாக பொது சுகாதாரம் தொற்று நோய்கள் பற்றியும் நாடு தழுவிய நோய்த்தடுப்பு மற்றும் குடும்ப நல்வாழ்வு, பிறப்பு இறப்பு பதிவு சம்மந்தமாகவும் பொது மக்கள் புரிந்துக் கொள்ளும் வகையில் விளம்பரம் செய்யப்பட்டது. நகரில் முக்கியமாக சிற்றுண்டி விடுதிகள், தேனீர் விடுதிகள், தங்கும் விடுதிகள், மற்றும் அபாயமும் அருவருப்பும் தரும் தொழில்கள் நடைபெறும் இடங்கள் அனைத்தும் அவ்வப்போது பார்வையிட்டு சுகாதாரம் நல்லமுறையில் கடைப்பிடிக்க ஆவன செய்யப்பட்டது.

## 19) பிறப்பு மற்றும் இறப்பு மகப்பேறு:-

அறிக்கை ஆண்டில் 1185 பிறப்புகளும், சென்ற ஆண்டில் 1210 பிறப்புகளும் பதிவாகியுள்ளது. இந்நகராட்சியின் தாய் சேய் நல விடுதி தற்பொழுது நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு மருந்தாளுநர், ஒரு மருத்துவமனை பணியாளர் மற்றும் பயிற்சி பெற்ற 4 நகர சுகாதார உதவியாளர்களும், 3 ஆயாவும் பணியாற்றி வந்தனர். அவர்களால் கவனித்த பிறப்பு 54 ஆகும். இது சென்ற ஆண்டில் 80 ஆக இருந்தது. இறந்து பிறந்த குழந்தைகள் எண்ணிக்கை ஏதும் இல்லை. எல்லா பிறப்பு இறப்புகளும் 3 துப்புரவு ஆய்வாளரும் 01.04.20112 முதல் 31.03.2013 வரை பதிவு செய்யப்பட்டது அறிக்கை ஆண்டு இறுதியில் கணக்கிடப்பட்ட மக்கள் தொகையின்படி பிறப்பு விகிதம் 19 இறப்பு விகிதம் 5.39அறிக்கை ஆண்டில் 298 இறப்புகளும் பதிவாகியுள்ளது.

## கொசுக்கட்டுப்பாடு:-

இந்நகராட்சியில் நகர்புற கொசு ஒழிப்பு திட்டத்தின் கீழ் 4 பணியாளர்கள் உள்ளனர், களப்பணி உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது. இவர்கள் 4 கைத்தெளிப்பான்களைக் கொண்டும், ஒரு புகை மருந்து தெளிப்பான் சிறியது ஒன்றும் பெரியது ஒன்றும் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் முதிர்கொசு ஒழிப்புப் பணிகளை செய்யப்பட்டது.

## இறப்புகள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | காய்ச்சல் | .. | – |
| 2 | வயிற்று போக்கு | .. | – |
| 3 | சீதபேதி | .. | – |
| 4 | காசநோய் | .. | – |
| 5 | மூச்சு வட சம்மந்தப்பட்டவைகள் | .. | 1 |
| 6 | புற்று நோய் | .. | 8 |
| 7 | நீரிழிவு வியாதி | .. | – |

| | | | |
|---|---|---|---|
| 8 | இருதய வியாதி | .. | 130 |
| 9 | டெட்னாஸ் | .. | – |
| 10 | தற்கொலை | .. | – |
| 11 | கர்ப்பிணி தாய்மார்கள் இறப்பு | .. | 2 |
| 12 | காலரா | .. | 3 |
| 13 | அம்மை | .. | – |
| 14 | பிளேக் | .. | – |
| 15 | மஞ்சள் காமாலை | .. | – |
| 16 | வெறி நாய் கடி | .. | 1 |
| 17 | பாம்பு கடி | .. | – |
| 18 | மற்றவைகள் | .. | – |
| 19 | வயோதிகம் | .. | 145 |
| 20 | வாத நோய் | .. | – |
| 21 | விபத்து | .. | 8 |
| | மொத்தம் | .. | 298 |

## பெரியம்மை

இந்த ஆண்டு நகரத்தில் அம்மை நோய் ஏதும் பரவவில்லை, கொள்ளை நோய் இல்லை

## உரக்கிடங்கு

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டு இறுதியில் கையிருப்பு உரம் | .. | இல்லை |
| 2 | பக்குவம் அடைந்த உரம் | .. | குப்பை மட்டும் உள்ளது |
| 3 | பக்குவம் அடையாத உரம் | .. | இல்லை |

நடப்பு ஆண்டில் உரகிடங்கு பணியாளர்கள் மற்றும் இந்த தலைப்பின் கீழ் செலவு ரூ.6,73,200.00 ஆகும். நகராட்சி உரக்கிடங்கில் 3 துப்புரவுப் பணியாளர்களும் ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளரும் பணிபுரிகின்றனர்.

## நலத்திட்டங்கள்

இந்நகராட்சியில் அரசு நலத்திட்டங்களில் இரு போலியோ முகாம்கள் நடத்தப்பட்டு முறையே 6621 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

## டாக்டர் முத்துலட்சுமி நிதி உதவி திட்டம்

இவ்வாண்டில் இந்நகராட்சியில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் ரூ. 34,56,000.00–ம் தகுதி வாய்ந்த கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்டது.

## ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

இவ்வாண்டில் 24 பயனாளிகளுக்கு ரூ.600 வீதம் ரூ.14,400 /– வழங்கப்பட்டது.

## உணவு கலப்பட மாதிரி எடுத்தல்:-

உணவு கலப்பட மாதிரிகள் நகராட்சியால் எடுப்பது இல்லை. அறிக்கை ஆண்டில் உணவு கலப்பட மாதிரிகள் எடுப்பதற்காக அரசால் உணவு பாதுகாப்பு அலுவலர் ஒருவரை நியமிக்கப்பட்டுள்ளார்கள். நகராட்சி மூலம் உணவு கலப்பட மாதிரிகளுக்கு லைசன்சுகள் வழங்கப்படுவது இல்லை.

## அபாயகரமானதும் அருவருக்கத்தகுமான உள்ள தொழில்கள்:-

எல்லா அபாயகரமானதும், அருவருப்பு தரக்தக்கதுமான தொழில்களுக்குரிய அனுமதி கட்டணம் மற்றும் உணவு கலப்பட தொழில் நடத்த கட்டணம் செலுத்தி தொழில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. விற்பனை பொருள்களுக்கும் இடத்திற்கும் தகுந்தார்போல் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. விற்பனை நிலையங்களையம், நிறுவனங்களையும் பொது நலத்துறை அலுவலர்கள் அடிக்கடி பார்வையிட்டு வந்தார்கள். இவ்வினங்களுக்கு 553 உரிமையாணைகள் வழங்கியதின் மூலம் நடப்பு ஆண்டில் 2,19,804/– வருவாய் கிடைத்துள்ளது.

## 20) துப்புரவு:-

இந்நகரில் 22 பொது கழிவறைகள் உள்ளன. அவைகளில் 132 பல அறைகள் கொண்டதாக உள்ளது. அனைத்தும் செப்டிக் டேங்க் கழிவறைகள் ஆகும். பேருந்து நிலையத்தில் சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

## வீட்டு கழிவறைகள் சுத்தம் செய்தல்

அறிக்கை ஆண்டில் நகரில் இருந்த மொத்த குடியிருப்பு வீடுகள் 12834 அதில் கழிவறைகள் வசதிகள் உள்ள வீடுகள் 10866 மேற்கூறிய குடியிருப்பு வீடுகளில் மொத்த கழிவறைகள் வசதியுள்ள வீடுகளின் எண்ணிக்கை 85% சதவிகிதம் ஆகும். உலர் கழிப்பிடங்கள் இல்லை எனவே வீட்டு கழிவறைகள் நகராட்சி மூலம் சுத்தம் செய்யப்படுவதில்லை.

## 21) கழிவுநீர் திட்டம்:-

இந்நகராட்சிக்கு சொந்தமான 8 ஏக்கர் 96 சென்ட் பரப்பளவு நிலம் கழிவுநீர் பண்ணையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரின் பல பகுதிகளிலிருந்த அப்புறப்படுத்தப்படும் கழிவுநீரை வீணாக்காமல் மேற்படி பண்ணையில் பாய்ச்சப்பட்டு பாரா கிராஸ் புல்லும் பயிர் செய்யப்பட்டு வந்தது.

## 22) நகர பொது சுகாதாரமும் இதர இனங்களும்:-

நகராட்சி துப்புரவு தொழிலாளர்கள் குடியிருப்பு வசதிக்காக 52 வீடுகள் அமைக்கப்பட்டிருகின்றனது. இவ்வாறு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படாத தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை அரசு அனுமதிக்கும் தொகையை வழங்கப்படுகிறது. மேலும் எல்லா துப்புரவு தொழிலாளர்களுக்கும் சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்கப்பட்டது. சீருடைகள் சுத்தம் செய்து கொள்வதற்காக சீருடை படியாக ரூ. 60.00 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவபடி ரூ. 100/–ம், தூசிப்படி ரூ. 20/–ம், துப்பரவுப்படி ரூ. 14/–ம் பிரதி மாதமும் வழங்கப்பட்டு வருகின்றனது. மேலும் அவர்கள் குடியிருக்குமிடத்தில் தண்ணீர் வசதிக்காக கிணறும், குடி தண்ணீர் குழாய் ஒன்றும் அமைக்கப்பட்டு உள்ளது. மின் விளக்கு வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

## தீத்தடுப்பு

நகராட்சி அலுவலகத்தில் தீத்தடுப்பு சாதனங்கள் இரண்டும் சுகாதார அலுவலகத்தில் ஒன்றும் அவசர தேவைக்காக பொருத்தப்பட்டு இருக்கிறது. அரசாங்க தீயணைப்பு நிறுவனம் ஒன்று இந்நகரில் முக்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## 23) குடிநீர் திட்டம்:-

அரசினரால் ஒப்புதலளிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்ட ஆரம்ப மதிப்பீட்டுத் தொகை ரூ. 648.00 லட்சம் ஆகும். ஆனால் இதுவரையில் செலவு செய்த தொகை ரூ.780.81 இலட்சம் ஆகும்.

இதற்காக அரசிடமிருந்து 31.03.2011 வரை ரூ.583.20 இலட்சமும் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர் நிர்வாகப் பொறியாளர் அவர்களுக்கு செலுத்தப்பட்டு மேற்படி பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசிடமிருந்து பெற்ற கடன் தொகைக்கு அறிக்கையாண்டில் ரூ 571134./– அசலுக்காக தவணை செலுத்தப்பட்டுள்ளது எல்லா தெருக்களுக்கும் ஒரு சில தெருக்கள் தவிர குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் பின்வரும் நீர்தேக்க தொட்டிகளிலிருந்து செய்யப்படுகிறது. சேர்மன் துரைசாமியார் ரோடில் மேல்நிலைப்பள்ளிக்கு அருகாமையில் உள்ள டவுன் சர்வே எண் 339/57–ல் காலியிடத்தில் 11.35 லட்சம் லிட்டர் கொள்ளவு உயர்நிலை நீர்த்தேக்க தொட்டி ஒன்றும் பழனிசாமியார் ரோட்டில் டவுன் சர்வே எண் 16–ல் தூய நெஞ்சக் கல்லூரி எதிரில் உள்ள காலியிடத்தில் 2.5 லட்சம் லிட்டர் கொள்ளவு உள்ள நீர்த்தேக்க தொட்டி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. 2001–ல் கௌதமபேட்டையில் 10.00 லட்சம் லிட்டர் கொள்ளவு நீர்த்தேக்கதொட்டி கட்டப்பட்டுள்ளது. மேலும் 2008–2009–ல் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் பாலம்மாள் காலனியில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளவு தொட்டி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

## 24) குடிநீர் கட்டணங்கள்

அறிக்கை ஆண்டில் இந்த தலைப்பின் கீழ் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 48.91 லட்சம் ஆகும். தற்போது 90 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் அமைக்கப்பட்டு நீர் இறைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. இதனால் எல்லாப் பகுதிகளுக்கும் தடையின்றி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. நகரில் உள்ள இணைப்புகள் பெறாத எல்லா வீடுகளுக்கும் இணைப்புகள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2012–2013 வரை உள்ள மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை .. 8713
2012–2013 வரை பொது குழாய்கள் இலவச இணைப்புகள் .. 96

## 25) இலாபகரமான இனங்கள்

இந்நகராட்சியில் பராமரித்து வரும் நிரந்தரக் கடைகள் 365, பங்க் கடை எண்–7, மற்றும் காலியிடங்கள் 3 ஆக மொத்தம் 375 கடைகளும் மற்றும் உணவகம் 2–ம் உள்ளது இவைகளின் மூலம் பின்வருமாறு வருமானம் கிடைத்தது.

| வ.எண் | கடையின் பெயர் | 2011–2012 | 2012–2013 |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | சேர்மன் குள்ளப்பனார் வர்த்தக நிலையம் (காலியிடம் சேர்த்து) | 425768.00 | 459300.00 |
| 2 | நகராட்சி பழைய பேருந்து நிலைய கடைகள் | 99924.00 | 121703.00 |
| 3 | பழைய பூ பழ அங்காடி | 114228.00 | 121282.00 |
| 4 | புதிய பூ பழ அங்காடி | 254375.00 | 310170.00 |
| 5 | சி.எம்.எஸ். மார்க்கெட் | 93584.00 | 102755.00 |
| 6 | பங்க் கடைகள் | 71811.00 | 79808.00 |
| 7 | ராஜன் தெரு கடைகள் | 39971.00 | 45975.00 |
| 8 | காயிதே மில்லத் அங்காடி | 1541936.00 | 1415343.00 |
| 9 | புதிய வணிக வளாகம் | 2510340.00 | 2460598.00 |
| 10 | புதிய பேருந்து நிலைய கடைகள் | 2789849.00 | 2560760.00 |
| 11 | பாரதியார் அங்காடி | 390580.00 | 482500.00 |
| 12 | தற்காலிக தினசரி காய்கறி கடைகள் | .. | .. |
| 13 | பழைய பேருந்து நிலைய புதிய கடைகள் | 299861.00 | 262738.00 |
| 14 | வாரச்சந்தை கடைகள் | 545191.00 | 529710.00 |
| 15 | வைத்தியர் சென்னமூர்த்தி தெரு மற்றும் புதிய பேருந்து நிலைய வடக்குப்புற கடைகள் | 3344261.00 | 3653327.00 |
| | மொத்தம் | 12521680.00 | 12606029.00 |

## 26) போக்கு வரத்து :-

இந்நகர மன்றத்திற்கு சொந்தமான லாரி மற்றும் பஸ் போக்கு வரத்து இல்லை எந்த பஸ் ரூட்டும் எடுத்து நடத்தவில்லை.

## 27) சந்தை பேருந்து நிலையங்கள் முதலியன:-

| வ.எண் | இடத்தின் பெயர் | 2009–10 | 2010–11 | 2011–2012 | 2012–2013 |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வாரச்சந்தை | 113000 | 34965 (குறை மூலம் வசூல்) | 33850 (குறை மூலம் வசூல்) | 32265 (குறை மூலம் வசூல்) |
| 2 | தினசரி மார்க்கெட் | 3125000 | 3280050 | 3442853 | 3284000 |
| 3 | பேருந்து நிலையம் (IDSMT) | 1211777 | 1270566 | 1332295 | 936000 |
| 4 | நவீன ஆடு அடிக்கும் தொட்டி | 148000 | 154800 | 161940 | 207000 |
| 5 | மாடு அடிக்கும் தொட்டி | 21800 | 23227 | 23789 | 24100 |
| 6 | சாலை மரங்கள் வசூல் தொகை | 3050 | 3203 | 3363 | 3400 |
| 7 | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (பழையது) | 180400 | 206640 | 216972 | 576000 |
| 8 | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (புதியது) | 1450555 | 1523083 | 1599237 | 2112500 |
| 9 | எடை பார்க்கும் கருவி | 19750 | 20738 | 21775 | 25777 |
| 10 | நகராட்சி கழிவுநீர் புல் பண்ணை | – | – | – | 4350 |
| 11 | மிதி வண்டி நிலையம் | 835777 | 877566 | 921445 | 932500 |
| 12 | ஒலி பெருக்கி விளம்பரம் | 40600 | 42630 | 44762 | 55555 |
| 13 | வாரச்சந்தை வளாக கட்டண கழிப்பிடம் | – | 38100 | 39737 | 54000 |
| | மொத்தம் | 7149709 | 7475568 | 7842018 | 8247447 |

## 28) பேருந்து நிலையம்:-

மத்திய ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ஐ.டி.எஸ்.எம்.டி) அரசிடமிருந்து கடன் பெற்று (1) நகர புல எண் 500 மற்றும் 501/2 வார்டு எண்–2, பிளாக் எண் 8–ல் முதல் கட்டமாக " பி " வகுப்பு பேருந்து நிலையம் மற்றும் கடைகள் கட்ட ரூ.41 லட்சம் மதிப்பீட்டிற்கும் (2) நகர புல எண் 15/2ஏ, வார்டு எண்–1, பிளாக் எண்–3, புதிய வாரச்சந்தை கட்ட ரூ.25 லட்சம் மதிப்பீட்டிற்கும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தம்முடைய செயல்முறைகள் ந.க.எண் 51885/90/யிபி2, நாள் 05.10.1991–ல் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள விவரப்படி கடைகள் கட்டி முடிக்கப்பட்டன. (ந.க.எண் 11239/91/இ1).

1) புதிய பேருந்து நிலையத்தில் முதல் கட்டமாக கட்டப்பட்டுள்ள கடைகள் மற்றும் இதர கட்டிடங்கள் விபரம் பின்வருமாறு இவைகள் 12.03.1995 முதல் பயனுக்கு கொண்டு வரப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1 | கடைகள் (10' X 10' அளவு) | .. | 28 |
| 2 | பெண்கள் தங்குமிடம் (20' X 10' அளவு) | .. | 1 |
| 3 | ஆண்கள் தங்குமிடம் (20' X 10' அளவு) | .. | 1 |
| 4 | உணவகம் (40' X 18' அளவு) | .. | 1 |
| 5 | பொருள்கள் வைப்பறை (10' X 10' அளவு) | .. | 1 |
| 6 | பேருந்து கட்டண வதிவறை (10' X 10' அளவு) | .. | 1 |
| 7 | கட்டண கழிப்பிடம் (ஆண்கள்–8, பெண்கள்–3) | .. | 1 |
| 8 | குளியல் அறை (ஆண்கள்–2, பெண்கள்–3) | .. | 1 |

2) வாரசந்தை கடைகள் விபரம் இவைகள் 23.05.1994 முதல் பயனுக்கு கொண்டு வரப்பட்டது.

நிரந்தர கடைகள் (15' X 10' அளவு) .. 20
திறந்தவெளி கடைஎண் (15' X 10' அளவு) .. 84

## 29) நில அபிவிருத்தி:

அ) நகர் அமைப்பு பிரிவில் அறிக்கை ஆண்டில் நகரமைப்பு அலுவலர் ஒருவரும் நகரமைப்பு ஆய்வர் ஒருவரும், சங்கிலியாள் ஒருவரும் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களாகும். மேற்படி பிரிவிற்கான நடப்பு ஆண்டின் மொத்த செலவு தொகை ரூ. 517566/– ஆகும்.

அரசினரால் 25.06.75–ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரின் 1232 எண்ணிட்ட ஆணைப்படி இந்நகராட்சியில் உள்ளூர் திட்ட அதிகாரக்குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி குழு அறிக்கை ஆண்டில் மூன்று முறை கூடி ஐந்து பொருள்கள் மீது தீர்மானங்கள் நிறைவேற்றின.

# திருப்பத்தூர் நகராட்சி – நகரமைப்பு

இந்நகராட்சியில் மூன்று விரிவு நகரமைப்புத் திட்டங்கள் உள்ளன. அவற்றின் விபரம் பின்வருமாறு.

1) விரிவு அபிவிருத்தி திட்டம் எண் – 1 (ஆரிச்செட்டி தெரு நகரமைப்புத் திட்டம்)
2) விரிவு அபிவிருத்தி திட்டம் எண் – 2 (புதுப்பேட்டை ரோடு தெற்கு நகரமைப்புத் திட்டம்)
3) விரிவு அபிவிருத்தி திட்டம் எண் – 3 (சாம நகர் நகரமைப்புத் திட்டம்)

## 1) விரிவு அபிவிருத்தி திட்டம் எண்–1

மேற்படி அபிவிருத்தி திட்ட இடங்களின் பரப்பளவு 64 ஏக்கர் 60 செண்ட் அல்லது 25.16 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசாணை பல்வகை எண் 158 நாள் 17.01.56–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் 01.08.1978–ம் தேதிய உத்திரவு எண் 1937–ன்படி இத்திட்டம் தயாரிக்கப்பட்டு 31.03.1983–ம் தேதி வரை காலக்கெடு கொடுத்து 1971–ம் வருடத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 29–வது பிரிவின்படி மேற்படி திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 54540/94–டிபி3, நாள் 10.01.1995–ல் அங்கீகரிக்கப்பட்டு வரைபடம் 4–க்கு D.D.P. (V.R.) DTCP NO.3/95 என எண்ணிடப்பட்டுள்ளது.

## 2) விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்–2

மேற்படி அபிவிருத்தித் திட்ட இடங்களின் பரப்பளவு 63 ஏக்கர் அல்லது 25.51 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசாணை பல்வகை எண் 158 நாள் 17.01.1956–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 1971–ம் வருடம் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 25–வது பிரிவின்படி ந.க.எண் 4270/94–டிபி3, நாள் 11.03.1994–ல் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களிடமிருந்து இணக்கம் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 5452/94–டிபி3 நாள் 24.01.1995–ல் அங்கீகரிக்கப்பட்டு வரைபடம் 4–க்கு D.D.P. (V.R.) DTCP NO.3/95 என எண்ணிடப்பட்டுள்ளது.

## 3. விரிவு அபிவிருத்தித் திட்டம்–3

மேற்படி அபிவிருத்தித் திட்ட இடங்களின் பரப்பளவு 27.37 ஏக்கர், அல்லது 11.09 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசாணை எண் 2889 நாள் 22.09.1958–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 1971–ம் வருட தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 29–வது பிரிவின்படி மேற்படி திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 54543/94–டிபி3 நாள் 24.01.1995–ல் அங்கீகரிக்கப்பட்டு வரைபடம் எண் 4–க்கு D.D.P.(V.R)DTCP No. 6/95 என எண்ணிடப்பட்டுள்ளது.

## முழுமைத்திட்டம்

இந்நகராட்சி முழுமைத்திட்டத்திற்கு அரசாணை எண் 1028 நாள் 05.12.1984–ல் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையில் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி முழுமைத்திட்டத்தின் மீது பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் பெற 21.08.1985–ம் தேதி தமிழ்நாடு அரசிதழிலும் 23.12.1985–ம் தேதி தினத்தந்தி இதழிலும் 05.01.1986–ம் தேதிய வடாற்காடு மாவட்ட அரசிதழிலும் பிரசுரம் செய்யப்பட்டு உள்ளது. பிறகு மேற்படி முழு திட்டத்தினை அரசு ஒப்புதலுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் மூலமாக அனுப்ப உள்ளூர் திட்ட குழுமத் தீர்மான எண் 24 நாள் 29.09.1986–ல் சில மாற்றங்கள் செய்ய கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை நகர் ஊரமைப்பு இயக்குநர், தனது 14.09.19987 தேதிய ந.க.எண் 7100/95–ம் தேதியில் அங்கீகரித்துள்ளார். மேலும் இரு நபர்களிடமிருந்து வரப்பெற்ற ஆட்சேபணைகளை ஏற்று உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மான எண் 51 நாள் 27.11.1987–ல் அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானித்தது. அதனை தொடர்ந்து அரசின் இறுதி அனுமதிக்காக நகர் ஊரமைப்பு இயக்குநர், மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்கள் மூலமாக இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 8117/85/எப்1, நாள் 28.01.1988–ல் முழுமைத்திட்ட அறிக்கைகள் அனுப்பப்பட்டு பின்பு அரசாணை எண் 21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் 05.01.1990–ல் முழுமை திட்டத்தை அங்கீகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மேற்படி முழுமைத் திட்டத்தை மாவட்ட அரசிதழில் 28.02.1991–ல் விளம்பரம் செய்யப்பட்டது. மீண்டும் அரசாணை எண் 168–ல் நாள் 09.04.1999–ல் மறு ஆய்வு திட்டம் இணக்கம் அளிக்கப்பட்டது. 06.08.1999 நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. 01.12.1999–ல் அரசிதழிலும், ஜனவரி 2000–ல் வேலூர் மாவட்ட அரசிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது இறுதி ஒப்புதலுக்காக ந.க.எண் 2523/98/எப்1, நாள் 02.02.2000–ல் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## நகர் அளவு

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண் 125 நாள் 08.09.2011–ன்படி திருப்பத்தூர் நகராட்சியின் எல்லைகள் விரிவு படுத்தப்பட்டு 33 வார்டுகளிலிருந்து 36 வார்டுகள் என எல்லைகள் நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது. திருப்பத்தூர் நகராட்சியுடன் இணைத்து விரிவுபடுத்தப்பட்ட எல்லைகள் திருப்பத்தூர் கிராமம் ஆகும். திருப்பத்தூர் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட திருப்பத்தூர் கிராமத்தில் நஞ்சை, புஞ்சை, புறம்போக்கு, மனைபகுதிகள், என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவைகளின் மொத்த விஸ்தீரணம் 512.715 ஹெக்டேர் ஆகும். நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள திருப்பத்தூர் கிராமத்தின் சர்வே எண் 1 முதல் 738 வரை ஆகும்.

எனவே திருப்பத்தூர் நகராட்சியுடன் புதியதாக இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட திருப்பத்தூர்கிராமத்தை நகரளவை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கட்டிடங்கள் (அரை ஆண்டு 1-க்கு)

| | | | |
|---|---|---|---|
| 1 | பொது வரிகளுக்கு | .. | 1. 1/8 சதவிகிதம் |
| 2 | சுகாதார வரி | .. | 2. ¼ சதவிகிதம் |
| 3 | நீர்ப்பு சாக்கடை வரி | .. | 6.00 சதவிகிதம் |
| 4 | விளக்கு வரி | .. | 3.00 சதவிகிதம் |
| 5 | கல்வி வரி | .. | 2. 1/2 சதவிகிதம் |
| 6 | மொத்தம் | .. | 15. 3/8 சதவிகிதம் |

**அரையாண்டிற்கு மொத்த வரி விகிதம்**

**காலிமனை (அரை ஆண்டு 1-க்கு)**

| | | | |
|---|---|---|---|
| 1 | பொது | .. | 4. 1/2 சதவிகிதம் |
| 2 | சுகாதார வரி | .. | 1. 16 சதவிகிதம் |
| 3 | வரி விளக்கு வரி | .. | 1 / 8 சதவிகிதம் |
| 4 | நீர்ப்பு சாக்கடை | .. | 1 / 8 சதவிகிதம் |
| 5 | அரையாண்டு 1-க்கு மொத்த வரி விகிதம் | .. | 5 1/8 சதவிகிதம் |

இது தவிர சொத்து வரியின் பேரில் ரூ. 1-க்கு 0.10 பைசா விதம் நூல் நிலைய கட்டணம் வசூலிக்கப்பட்டு உள்ளூர் நூலக குழு அலுவலருக்கு செலுத்தப்படுகிறது.

வண்டி வாகன வரி, தொழில் வரி இவைகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ல் குறிப்பிட்டுள்ளபடி அதிக பட்ச வரி விதிக்கப்பட்டுள்ளது.

## 30) மக்கள் தொகையின் பேரில் வரி விகிதம்

சொத்துவரி நடப்பு ஆண்டில் மக்கள் தொகையில் தலா ரூ.221.01 மொத்தம் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 18431 தொழில் வரி விதிக்கப்பட்ட வரி எண்ணிக்கை 3482 ஆக நடப்பு ஆண்டில் இருந்தது.

## 31) நடப்பு ஆண்டில் வரி வகையில் மொத்தமாக கேட்பு தொகை வரவு நிலுவை விபரம் கீழ்வருமாறு 2012–2013

| இனங்கள் | கேட்புத் தொகை ரூ. லட்சத்தில் | வரவு ரூ. லட்சத்தில் | தள்ளுபடி செய்தது ரூ. லட்சத்தில் | நிலுவை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| வரியுள்ள இனங்கள் | 517.48 | 272.54 | – | 244.94 |
| வரியில்லா இனங்கள் | 260.42 | 219.73 | – | 40.51 |

## 32) பொது நிதி நிலைமை

**வரவு செலவு கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆரம்ப கையிருப்பு | .. | 94,76,177.00 |
| 2 | வரவு | .. | 11,16,20,113.00 |
| 3 | மொத்தம் | .. | 12,10,96,290.00 |
| 4 | மொத்த செலவு | .. | 11,17,70,460.00 |
| 5 | ஆண்டு முடிவில் கையிருப்பு | .. | 93,25,830.00 |

## 33) முதலீடுகள்

**(01.04.2012 முதல் 31.03.2013) அறிக்கை ஆண்டில் முதலீடுகளின் விவரம்**

| வ.எண் | நிதியின் பெயர் | ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | IUDM | 200.00 | 11.01.2013–ல் முடிக்கப்பட்டது |
| 2 | IUDM | 50.00 | நடைமுறையில் உள்ளது |
| 3 | EE FUND | 25.00 | நடைமுறையில் உள்ளது |

## 34) தேசிய சேமிப்புத் திட்டம்

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சிக்கு குறியீடு சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படவில்லை. இருப்பினும் அனைத்து நகராட்சி ஊழியர்களும் தேசிய திட்டமாகிய இந்த சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு அனைத்து ஊழியர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது.

## 35) பொதுக் குறிப்புகள்

அறிக்கை ஆண்டில் நகர்மன்ற தலைவர் அவர்களால் கூட்டப்பட்ட மன்ற கூட்டத்தின் முன் வைக்கப்பட்ட எல்லா பொருள்களும் தடையின்றி நிறைவேற்றப்பட்டது.

## பள்ளி குழந்தைகள் சத்துணவு திட்டம்

தமிழ்நாடு அரசு சத்துணவு"திட்டம், நகராட்சி ஆரம்ப பாடசாலையில் படித்து வரும் 5 வயது முதல் 9 வயது வரையிலான பள்ளி குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 07.09.1982–ம் தேதிய 1379 எண் அரசு ஆணைக்கேற்ப இந்நகராட்சியில் 15.09.1982 முதல் அமுல் செய்யப்பட்டு 11 மையங்கள் நகராட்சி ஆரம்ப பாட சாலைகளில் நடைபெற்று வருகின்றது. இந்நகராட்சியில் அரசு மான்யத்தின் மூலம் அறிக்கை ஆண்டில் 10 நிரந்தர சமையல் கூடம் வசதிகளுடன் இருக்கிறது. ஒரு சத்துணவு மையம் வாடகை கட்டிடத்தில் நடைப்பெற்று வருகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் அமைப்பாளர் ஒருவரும் சமையல் செய்பவர் ஒருவரும் உதவியாளர் நியமிக்கப்பட்டு நல்ல முறையில் நடைப்பெற்று வருகின்றன. மேற்படி திட்டத்திற்கு அறிக்கை ஆண்டில் ரூ.18,48,579.00 சம்பளமாகவும், ரூ.1,21,390.00 செலவினம் உணவும் செலவுக்காவும், மொத்த செலவு ரூ.19,69,969.00 ஆகும். அதன் செலவினம் அரசிடமிருந்து மான்யமாக பெறப்பட்டது.

சென்ற ஆண்டுகளைப் போலவே அறிக்கை ஆண்டிலும் சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிர்வாகம் சுமுகமாக நல்ல முறையில் நடக்க தொடர்ந்து ஒத்துழைப்பும், ஆலோசனையும் அவ்வப்பொழுது வழங்கிய நகராட்சி அனைத்து பிரிவு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு நிர்வாக அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

ஆணையர்,
திருப்பத்தூர் நகராட்சி

30/9/13